**தலைப்பு 276 – பதுளை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதுளை மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதுளை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) பதுளை மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) பதுளை மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என நான் தெரிவிக்கின்றேன்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

இது தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிதிச் செயலாற்றல் கூற்று**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய வருமானக் கணக்கீட்டு உத்தியோத்தர்களுக்காக மாவட்ட செயலகத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 153,872,368 ஆன வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய வருமானங்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) அரசின் உத்தியோகத்தர்களுக்கான முற்பணத்தை மீள அறவிடுதல் மற்றும் முற்பண கடன் கொடுப்பனவு முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்ட செயலகத்தில் நிதி செயற்பாடுகளில் ஈடுபடாதிருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளில் வைப்புக் கணக்கு மற்றும் ஏனைய செயற்பாடுகளில் அதிகரிப்பாக ரூபா 9,733,420 குறிப்பிடப்பட்டிருந்தது.

**(இ) நிதி நிலைமைக் கூற்று**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,407.11 என காண்பிக்கப்பட்டிருந்தது, | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை | மாவட்ட செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டமையால் அதனை நிரப்புவதற்கு காலதாமதமொன்று |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அச்சொத்துக்கள் தொடர்பாக அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சொத்துக்கள் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | எடுக்கப்படல் வேண்டும். | இடம் பெற்றிருந்ததுடன் கட்டளை வழங்கல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ii) | மாவட்ட செயலகத்திற்குரிய 11 சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | **அவதானிப்புக்கள்** | | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| | | **ரூபா** | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | நிதிப்பிரமாணம் 715(2) | 35,172 | களஞ்சிய செயற்படுகள் தொடர்பாக கடமைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் முறையாக களஞ்சிய நடவடிக்கைகளை பேணாமை | நிதிப்பிரமாணம் 715(2) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 104 இன் பரிசோதனையொன்றினை மேற்கொள்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | காரணமாக ஹப்புத்தளை பிரதேச செயலகத்தின் 22 இருப்பு விடயங்கள் பற்றாக்குறையாக காணப்பட்டன | | |
| (ஆ) | ஓய்வூதிய சுற்றறிக்கை<br>--------------------------------------<br>2010 செப்தம்பர் 07 ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க சுற்றறிக்கை | 9,194,037 | 05 பிரதேச செயலகங்களில் 45 சந்தர்ப்பங்களில் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமல் வாழ்க்கை செலவின படிகள் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, | 2010 செப்தம்பர் 07 ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஹாலிஎல பிரதேச செயலகத்தின் அறவீடுகள் அனைத்தும் முறையாக இடம்பெறுவதுடன் ஹப்புத்தளை பிரதேச செயலகத்தில் தரைப்படை சம்பளம் திருத்தம் செய்யப்பட்ட காரணத்தினால் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, ரிதீமாலியத்த மற்றும் பசறை பிரதேச செயலகத்தினால் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஊவபரணகம பிரதேச செயலகத்தினால் கூடுதலான கொடுப்பனவு கண்டறியப்பட்டதுடன் பின்னர் அறவீடு மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | சமூக வலுவாக்கல் மற்றும் நலன்புரி அமைச்சின் சுற்றறிக்கை<br>---------------------------------------- | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 சனவரி 12 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | 64,300 | நலனாலிகளின் இறப்பு தொடர்பாக தகவல்கள் முறையாக பதிவேடுகளுக்குட்படுத்தாதிருந்ததுடன் பிரதேச செயலகம் அறிவூட்டல் தாமதமும் இருந்தது. இதன் காரணமாக நலனாலிகளின் மரணத்தின் பின்னரும் 4 பிரதேச செயலகங்களுக்குரிய அவர்களின் பரிதிகளுக்கு 19 சந்தர்ப்பங்களில் கூடுதலாக படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் 2.7 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தவறான கொடுப்பனவுகள் தவிர்க்கப்படல் வேண்டும். | பிரதேச செயலகத்தினால் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| | | 336,300 | 03 பிரதேச செயலகங்களில் தொடர்ந்து மூன்று மாதங்கள் கொடுப்பனவிளைப் பெற்றுக் கொள்ளாத போதிலும் படிகள் பதிவேட்டிலிருந்து பெயர் அகற்றப்படாத 32 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் காரணமாக படிகள் பெற்றுக்கொள்ளும் உரித்துள்ள தரப்பினர் அப்படிகளைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் 2.14 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | பிரதேச செயலகங்களினால் எதிர்வரும் காலங்களில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | இலங்கை மகளிர் பணியகத்தின் சுற்றறிக்கை<br><br>சுழற்சிக்கடன் நிகழ்ச்சிதிட்டத்தினை செயற்படுத்துவதற்கான அறிவுறுத்தல் - iv இல் 2.6 வது பந்தி | 698,962 | 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 02 பிரதேச செயலகங்களுக்குரிய 87 நலனாலிகளினால் செலுத்தப்பட வேண்டிய கடன் குறித்த திகதியில் கொடுப்பனவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த திகதிகளில் கடன் தொகை அறவிடப்படல் வேண்டும். | பிரதேச செயலகங்களினால் அக்கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தன. |

| | | |
|---|---|---|
| | | செய்யப்படாமல் தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. |

**(உ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதுளை மாவட்ட பிரதேச தொலைக்கல்விப் பயிற்சி நிலையத்திற்குரித்தாக பேணிச் செல்லப்படும் நிலையான, நடைமுறை சேமிப்பு ஆகிய 03 கணக்குகளுக்குரிய 2018 யூன் 30 ஆந் திகதி ரூபா 10,568,504 ஆன காசு மீதியொன்று காணப்பட்டதுடன் அம்மீதி எந்தவொரு நிதிக்கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி கணக்குகளில் மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும் | கணக்குகளிலுள்ள பணத்தை தீர்வு செய்வதற்குரிய தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சிற்கு அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களை குறிப்பிடுக.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு - கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித்திட்டம்** | | |
| (i) | பண்டாரவளை பிரதேச செயலகத்தினால் நிர்மாண செயற்திட்டங்களின் வளைந்த பலகை | நிர்ணயிக்கப்பட்டிருந்த விதந்துரைகள் மற்றும் விலைகள் அடிப்படையாகக் கொண்டு | சரியான விலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளுக்கு உரித்தல்லாத விலைகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக ரூபா 40,133 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். | |
| (ii) | செயற்திட்ட காணிக்கு நிர்மாண பொருட்களை கொண்டுவரும் செயற்பாட்டிற்காக 02 பிரதேச செயலகங்களால் நிறைவேற்றப்பட்ட 02 செயற்திட்டங்களுக்காக ரூபா 85,203 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கும் போது பௌதீக நிலைமைகள் கருத்திற் கொள்ளப்பட்டு பொருளாதார சிக்கனத்துடன் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | நுழைவு வீதி பிரயாண செயற்பாடுகளுக்காக பொருத்தமான நிலைமையில் காணப்படவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது |
| (iii) | செயற்திட்டங்களின் வேலைக ளுக்காக கொடுப்பனவு செய்யும் போது பயன்படுத்த வேண்டிய விலைக்குப் பதிலாக வேறு விலைகள் அடிப்படையாகக் கொண்டு இரண்டு பிரதேச செயலகங்களால் நிறைவேற்றப்பட்ட 07 செயற்திட்டங்களுக்காக ரூபா 714,563 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சரியான விதந்துரைகள் மற்றும் விலைகள் பயன்படுத்தப்பட்டுள்ள ன. | கூடுதலான கொடுப்பனவொன்று இடம்பெறவில்லையென்பது டன் தவறுதலாக இடம்பெற்ற ஒன்றாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| **(ஆ )** | **கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு - குளத்துடன் கூடிய கிராமம் என்ற நிகழ்ச்சித்திட்டம்**<br>---------------------------------------------------------- | | |
| (i) | மஹியங்கனை நிர்மாண செயற்திட்டத்திற்கு நிறைவேற்றப்பட்ட வீதியொன்றின் நிர்மாண செயற்திட்டத்திற்கு தேவையான அங்கீகரிக்கப்பட்ட வகையான 450 கனமீற்றர் மண்ணை | மதிப்பீடு தயாரித்தல், பரீட்சித்தல் மற்றும் அங்கீகரித்தல் கட்டங்களில் உரிய மதிப்பீட்டின் சரியான தன்மை உட்பட பொருத்தமான தன்மை தொடர்பான பரீட்சிக்கப்படல் | மதிப்பீடு தயாரிக்கும் போது தாமதமொன்றினால் இம்மண்ணின் அளவு உள்ளடக்கப்பட்டிருந்துட ன் உள்ளவாறான அளவு ஒரு கியூபிக் மீற்றர் மண் ரூபா 287.72 என குறிப்பிடப்பட்டிருந்தது |

| | | | |
|---|---|---|---|
| | அகல்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட விலையினை விட கூடுதலான விலையொன்றை உள்ளடக்கியிருந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யும் போது ரூபா 158,240 கூடுதலாக கொடுப்பனவு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | வேண்டும். | |
| (ii) | 200 ஆன மீற்றரை விஞ்சி மதிப்பீடு செய்யப்பட்ட மண் போக்குவரத்திற்காக உரித்தான போக்குவரத்து கிரயத்தை விட கூடுதலான போக்குவரத்து கிரயமொன்று உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டமையால் மஹியங்கனை பிரதேச செயலகத்தினால் நிறை வேற்றப்பட்ட 02 செயற்திட்டங்களுக்காக ரூபா 179,913 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடு சரியாக செய்யப்பட்டு அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும | தவறு காரணமாக 200 cum விட குறைந்த விலை பயன்படுத்தப்பட்டுள்ளதாக வும் எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| **(இ)** | **தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**<br>-----------------------------------------------<br>கம்பரெலிய அதிவேக கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2018<br>------------------------------------------------ | | |
| (i) | ரிதிமாலியத்த பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்கு சுற்றுக் கம்பி இடும் செயற்பாட்டிற்கு ரூபா 26,882 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக சரியாக பரீட்சிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் | கூடுதலாக கொடுப்பனவொன்று இடம்பெறவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ii) | ரிதிமாலியத்த பிரதேச செயலகத்தினால் | குறைந்த விலைகளின் கீழான | சகல வீதி நிர்மாணங்களும் அதிக |

| | | | |
|---|---|---|---|
| | வீதிகளுக்கு கொங்கிரீட் இடும் 10 செயற் திட்டங்களுக்காக வீதியின் இரண்டு பக்கங்களுக்கும் வளைவு பலகைகள் அடித்தல் மற்றும் கழற்றி அகற்றும் செயற்பாடுகளுக்காக குறைந்த கிரயமொன்றுடன் கூடிய விலை பயன்படுத்தப்படுவதற்கு பதிலாக அதற்கு மேற்பட்ட கூடுதலான வேறு விலையொன்றை அடிப்படையாகக் கொண்டதன் காரணமாக ரூபா 60,622 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | விதந்துரைகள் மற்றும் விலைகள் பயன்படுத்தப்படல் வேண்டும். | மழை காலங்களில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அந்த இடங்கள் சதுப்பாக இருப்பதால் அவ்விலை பயன்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (iii) | பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்த வீதிகளுக்கு கொங்கிரீட் இடும் 03 செயற்திட்டங்களுக்கு இயந்திரங்களின் மூலம் 1:2:4 கலவையில் கொங்கிரீட் கலவை விலை பயன்படுத்தப்படாமையால் ரூபா 22,059 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | குறைந்த விலைகளின் கீழான விதந்துரைகள் மற்றும் விலைகள் பயன்படுத்தப்படல் வேண்டும். | இச் செயற்திட்டம் செயற்படுத்தப்படும் கிராமிய சங்கங்களுக்காக உரிய இயந்திர உபகரணங்கள் இல்லாமையால் அந்த இயந்திரங்கள் வாடகைக்கு எடுக்கும் போது மேலதிக கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டமையால் இந்த விலை பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (iv) | ரிதிமாலியத்த பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்த 07 வீதி நிர்மாண செயற்திட்டங்களுக்காக 10 தொன் அதிர்வு ரோலைப் பயன்படுத்துவதற்காக ரூபா 270,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அதிர்வு கோல் பயன்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | விசேட விடயமொன்றை பகிர்ந்தளிக்கும் போது பொறுப்புவாய்ந்த தரப்பினரின் பரிந்துரைகள் வழங்கப்பட்டதன் பின்னர் சிக்கனமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | முன்னைய அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் 10 தொன் ரோல் பயன்படுத்தி பதப்படுத்தினால் பின் நீண்டகாலமாக வீதியை பயன்படுத்துவதற்கு முடியுமாகையால் இதுவரை வீதிகளை அமைக்கும் போது 8 - 10 தொன் ரோல் பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2.2 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3.69 மில்லியனான மீதிகள் காணப்பட்டன. அம்மீதிகளில் ரூபா 1.85 மில்லியனான மீதிகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இருந்து வந்தன. மீளாய்வாண்டின் இறுதியில் அம்மீதிகளை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது. | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 பிரிவு மற்றும் 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2 பிரதேச செயலகங்களுக்குரிய 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 05 ஆண்டுகளுக்கு குறைந்த கடன் மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஊவா மாகாண சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளை அறவிடுவதற்காக பிரதான செயலாளருடன் கலந்துரையாடல் மேற் கொள்ளப்பட்டதாகவும், 04 பிரதேச செயலகங்களுக்குரிய ஏனைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2.3 வைப்பு மீதிகள்

வைப்புக் கணக்கின் மீதிகள் தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 248.28 மில்லியனாக இருந்தது. இம்மீதிகளிலிருந்து ரூபா 3.27 மில்லியனான வைப்பு மீதிகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்த போதிலும் அம்மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 107,011 ஆன வைப்புக்கள் செலுத்த முடிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 923,600 தொகையான வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ரூபா 607,271 ஆன வைப்புக்களில் ரூபா 506,525 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையான ரூபா 100,745 |

| | | | |
|---|---|---|---|
| | | | தொகை உரிய திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 2,176,899 ஆன வைப்புக்கள் மாவட்ட செயலக கட்டிட நிர்மாணத்தின் நிறுத்தி வைத்தல் தொகையாக இருப்பதால் திருத்தங்களுக்கான நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 03 பிரதேச செயலகங்களுக்குரிய 02 ஆண்டுகளை கடந்த ரூபா 759,855 தொகையான 18 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பசறை பிரதேச செயலகத்தினால் உரிய தரப்பினர் அறிவூட்டப்பட்டுள்ளதுடன் ஊவபரணகம பிரதேச செயலகத்தினால் காலாவதியான வைப்புக்கள் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. எல்ல பிரதேச செயலகத்தினால் எதிர்காலத்தில் இந்த வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 06 பிரதேச செயலகங்களுக்குரிய ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,228,863 தொகையான 35 வைப்புக்களின் நிதி ஏற்பாடு உரிய செயற்பாடுகளை நிறைவேற்றாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாடு கிடைத்தவுடனேயே உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரதேச செயலகங்களால் இயந்திர ஏற்பாடுகளிலிருந்து ஒரு பகுதியை இதுவரை தீர்வு செய்துள்ளதுடன் எஞ்சியவதற்றை எதிர்காலத்தில் தீர்வு செய்ய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் (Outcome) அடையப்படாமை

பதுளை மாவட்ட செயலகத்தினால் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஹல்தும்முல்லை பிரதேச செயலகத்தினால் ரூபா | நலனாளிகளின் தேவைப்பாடு மற்றும் | ஹல்தும்முல்லை பிரதேச சபை தலைவருக்கு இச் |

| | | | |
|---|---|---|---|
| | 494,890 தொகை செலவு செய்து உஸ்ஸல்ல வாரச் சந்தையை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி வரை அச்செயற்பாட்டிலிருந்து எவ்வித பயனொன்றும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | செயற்திட்டங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | எல்ல நகரத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில் எல்ல பிரதேச செயலகத்தினால் ரூபா 1,078,890 தொகை செலவு செய்து 2016 திசெம்பர் 30 ஆந் திகதி எல்ல நகருக்கு சீசீடீவீ கமெரா முறைமையொன்றை பொருத்தும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 02 சந்தர்ப்பங்களின் போது அங்கு பௌதீக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அவ்வாறான 02 சந்தர்ப்பங்களில் செயற்திட்டம் விளைவற்ற வகையில் காணப்பட்டன. | நலனாளிகளின் தேவைப்பாடு மற்றும் நோக்கங்கள் முறைப்படி இனங்காணப்பட்ட அந்நோக்கங்களினை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டம் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகளை உரிய தரப்பிர்களுடன் கலந்துரையாடி எதிர்வரும் காலங்களில் கெமரா முறைமையை பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளிமடை பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ செவன கட்டிட நிர்மாணத்திற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,994,000 செலவிடப்பட்டு 2017 திசெம்பர் 29 ஆந் திகதி நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இக்கட்டிடம் 2018 ஒக்டோபர் 11 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | மதிப்பீடு தயாரிக்கப்படும் போதும் செயற்படுத்தும் போதும் நடைமுறை நிலைமை கருத்திற் கொண்டு அதற்கு உரிய மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். | கட்டிடங்கள், துரிதமாக உரிய நிலைமைக்கு கொண்டு வரப்பட்டு இச் செயற் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊவபரணகம பிரதேச செயலகத்தினால் செயற்திட்டமொன்றை செயற்படுத்துவதற்காக 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி ரூபா 1.94 மில்லியனுக்கு ஒப்பந்தக்காரருடன் வேலை பூர்த்தி செய்வதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அச் செயற்திட்ட நடவடிக்கைகள் 2018 ஒக்டோபர் 03 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை நிலைமையை கருத்திற் கொண்டு அதற்குரிய வகையில் மதிப்பீடு தயாரித்தல் இடம் பெற வேண்டும். | உரிய தரத்துடன் ஓடுகள் இல்லாமல் இருந்ததாகவும் கால நீடிப்பு வைக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. |

## 3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 பிரதேச செயலகங்களினால் ரூபா 427,117 செலவு செய்து 02 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. 2018 யூலை 02 மற்றும் 2019 சனவரி 22 ஆந் திகதி வரையில் செயற்திட்டங்களில் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உரிய வேலை அல்லது சேவைகள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். | அக் குறைபாடுகளை பூர்த்தி செய்யுமாறு ஒப்பந்தக்காரர் அறவிடப்பட்டிருந்ததுடன் எனினும் நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிக்க கூடாதென பண்டாரவளை பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வது தொடர்பான நம்பிக்கையின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டதாகவும் தற்போது வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஹப்புத்தளை பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அரசிற்கு சொந்தமான வாகனங்களின் பதிவு உரித்து தொடர்பாக சிக்கல்களை தீர்வு செய்தல் | | |
| 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 03 பிரதேச செயலகங்களுக்குரிய 04 வாகனங்களின் உரித்தை கையேற்பது தொடர்பாக 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மஹியங்கனை பிரதேச செயலகத்திற்கு சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் ரிதிமாலியத்த பிரதேச செயலகத்தினால் கையளிப்பு நடவடிக்கைகளை துரிதமாக செய்து தருமாறு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எல்ல பிரதேச செயலகத்தினால் எதிர்வரும் நடவடிக்கைகை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ) சொத்துக்களின் பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளல்** | | |
| (i) ஹாலிஎல பிரதேச செயலகத்திற்குரிய 1647 சதுர அடியுடன் கூடிய பிரதேச செயலாளரின் உத்தியோக பூர்வ விடுதியில் 2009 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவொரு உத்தியோகத்தரும் குடியிருக்கவில்லை. அக் கட்டிடங்களில் திருத்தங்களை மேற்கொள்ளமையால் உருக்குலைத்து | சொத்துக்களின் திருத்தங்கள் உரிய காலப்பதியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திருத்த வேலை மேற்கொள்ளல் பொருளாதார ரீதியாக சாதகம் இல்லையெனவும் புதிய கட்டிடங்கள் நிர்மாணத்திற்காக பழைய கட்டிடங்களின் பகுதியொன்றை அகற்றுவதற்கு நேர்ந்தால் பொருட்கள் / உபகரணங்கள் வைப்பதற்கு பயன்படுத்தியதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. அக்கட்டிடங்களில் வெவ்வேறு பொருட்கள் மற்றும் கோவைகள் வைக்கும் களஞ்சியமொன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | ரிதிமாலியத்த பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2015 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் அலுவலக வளவில் உருக்குலைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் திருத்தங்கள் உரிய காலப்பகுதியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திருத்தம் செய்வது பயனற்றது என மோட்டார் போக்குவரத்து பரிசோதகர் குறிப்பிடப்பட்டிருந்தாகவும் கெப் வண்டியின் உரித்து கையேற்கப்பட்டதன் பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. |

**(இ) <u>சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை</u>**

-----------------------------------------------------
---

| | | |
|---|---|---|
| ரிதிமாலியத்த பிரதேச செயலகத்திற்குரிய விபத்திற்குட்பட்டிருந்த கெப் வண்டியொன்று திருத்த வேலைகளுக்காக உரிய முகவர் நிறுவனத்திற்கு தொடர்பு படுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய திருத்த வேலைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாமல் 01 ஆண்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக முகவர் நிறுவன வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையால் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |

## 3.5 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாவட்ட செயலத்திற்குரிய வேன் வண்டியொன்று 2014 யூலை 08 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அவ்விபத்து காரணமாக ரூபா 191,632 ஆன நட்டமொன்று இடம் பெற்றிருந்தது. இந் நட்டங்களிலிருந்து ரூபா 138,369 தொகை உரிய காப்புறுதி கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 53,263 ஆன நட்டங்கள் சேதங்களை அதற்குப் பொறுப்பான உத்தியோக்கத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 103, 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் (2019.05.03) மீண்டும் பரிசோதனை சபையொன்று நியமிப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களுக்குரிய 2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 11 வாகன விபத்துகளுக்குரிய ரூபா 8.86 மில்லியனான இழப்புக்கள் மற்றும் சேதங்கள் இடம்பெற்றிருந்தன. இவ்விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டங்களை அறவிடுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எல்ல பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டி விபத்திற்குட்பட்டமை தொடர்பாக பரிசோதனை நடாத்துவதற்கு பரிசோதனை குழு அமைச்சு அங்கீகாரத்திற்கான அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகாரம் இதுவரை கிடைக்காமல் இருப்பதாகவும் ஊவபரணகம பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டி விபத்திற்காக மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக் கொண்டுள்ள போதிலும் எல்ல பிரதேச செயலகத்திற்கு கெப் வண்டியின் விபத்திற்காக வழக்கொன்று விசாரிக்கப்படுவதாகவும் மாவட்ட செயலகத்திற்குரிய வண்டியின் விபத்திற்காக மீண்டும் பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட்டு பொறுப்பு வாய்ந்தவர்கள் தர்மானிக்கப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாகவும் ஊவபரணகம பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டி விபத்திற்கான |

| | | |
|---|---|---|
| | | பரிசோதனை குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும், 06 கெப் வண்டிகளுக்குரியதாக இடம் பெற்ற விபத்துகளுக்காக நி.பி 104 (4) இன் கீழ் நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கைக்குரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதிய சம்பளம் கொடுப்பனவு செய்யப்படும் போது சம்பளத்தை கணிப்பிடுவதற்குரியதாக காலத்திற்கு காலம் மாற்றங்களுக்கு உட்படக்கூடிய சட்டங்கள், விதிகள், சுற்றறிக்கைகள், ஆலோசனை கடிதங்கள் தொடர்பாக கவனத்துடன் செயற்படாமை மற்றும் கணக்கீட்டு தவறுகள் காரணமாக 07 பிரதேச செயலகங்களுக்குரிய 84 ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ரூபா 17,639,557 ஆன ஓய்வூதியம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையை அறவிட்டுக் கொள்ளல் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகள் சரியாக பின்பற்றப்பட்டு சம்பளம் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். | 04 பிரதேச செயலகங்கள் சுற்றறிக்கைகள் அறிவுறுத்தல் தொடர்பாக அறிந்திராமையால் தரைப்படை சம்பளம் மற்றும் வாழ்க்கை செலவினப் படிகள், கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் ஒரு பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த மேலதிக கொடுப்பனவை அறவிடுதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளதால் எதிர்காலத்தில் இவ்வாறாக சிக்கல்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ii) பசறை பிரதேச செயலகத்தினால் ஓய்வூதிய சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்ட ஓய்வூதியம் பெறுவோர் ஒருவரின் இறப்பை கிராம உத்தியோகத்தர் அறிக்கையிடாமையால் இறந்த ஓய்வூதியம் பெறுவோருக்கு ரூபா 61,622 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத்தொகையில் 2019 மே 31 அந் திகதி வரை ரூபா 36,622 அறவிடப்பட வேண்டியிருந்தது. | ஓய்வூதியம் பெறுவோர் மரணிக்கும் போது அது தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு உடனடியாக அறிவூட்டும் நடைமுறையொன்று ஏற்படுத்தப்படல் வேண்டும். | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தை மரணித்த ஓய்வூதியம் பெறும் வாரிசுகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை ரூபா 29,800 அறவிடப்பட்டுள்ள தாகவும் எஞ்சிய தொகையான ரூபா 36,622 ஆன பணத்தை அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | ஊவபரணகம பிரதேச செயலகத்தினால் ஓய்வூதிய கொடுப்பனவினைப் பெறுகின்ற ஓய்வூதியக்காரரின் மரணம் தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு முறைப்படி அறிவிக்கப்பட்டிருந்தும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாமல் 2017 மே மாதம் முதல் 2018 ஏப்ரல் வரை ரூபா 353,738 தொகை மரணிந்த ஓய்வூதியக்காரருக்கு ஓய்வூதியமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஓய்வூதியம பெறுவோரின் மரணம் தொடர்பாக தகவல் கிடைத்தவுடன் அக்கொடுப்பனவு இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விடயத்திற்குப் பொறுப்பான எழுதுனர் அறிவூட்டப்படல் வேண்டும். எனினும், கடமை புறக்கணித்தமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வங்கியிலிடப்பட்ட போதிலும் கொடுப்பனவு மேற்கொள்ளப் படாமையால் அதனை மீண்டும் கொண்டு வந்ததன் பின்னர் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |